# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC. 94/2020 | Age :59 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW10/ PW-7 | |
| Name : அம்மாதுரை, காவல் துணை கண்காணிப்பாளர் | Religion : |
| Father's/Husband's Name : | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 10.10.2024.**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி. அபிராமி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் 1 முதல் 3 மற்றும் 5 முதல் 8 ஆஜரில் இருந்தார்கள். 4ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கள்ளக்குறிச்சி கனியாம்பூர் சம்பவ சிறப்பு கண்காணிப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 13.02.2015 ம் தேதி திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது திருவிடைமருதூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பாரதிதாசன் என்பவர் திருவிடைமருதூர் காவல் நிலைய குற்ற எண் 67/2015 சட்டப் பிரிவுகள் 147, 148,

294(பி), 448, 506(2) இதச மற்றும் பிரிவு 3(1) தமிழ்நாடு பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் தடுத்தல் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து வழக்கின் கோப்பினை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். நான் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 14.02.2015 ம் தேதி காலை 11 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் நவோதியா மற்றும் துர்க்கா ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ( **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் பாலு, முனியப்பன், முருகன், ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு எனக்கு பணி மாறுதல் வந்துவிட்டதால் வழக்கின் கோப்பினை மேல் விசாரணைக்காக எனக்கு பின்னால் பொறுப்பேற்ற காவல் ஆய்வாளர் மோகன்தாஸ் என்பவரிடம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் புகார் கொடுத்த தேதி 08.02.2015 என்றால் சரிதான். புகார் மனுவில் சம்பவ தேதி 06.07.2014 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 7 கி.மீ. தூரம் இருக்கும். காலதாமதமாக புகார் அனுப்பப்பட்டதற்கு சிறப்பு காரணம் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் புகாரின் பின்பக்கத்தில் சம்பவ நாளில் உயிருக்கு பயந்து குடும்பத்தோடு வெளியூர் சென்றுவிட்டதாகவும் வீட்டுக்கு வந்தபோது எதிரிகள் வீட்டிற்குள் விடவில்லை என்றும் காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது. 06.07.2014 ம் தேதி செல்வம் என்பவர் இறந்துவிட்டதாகவும் அதன் தொடர்ச்சியாக எதிரிகள் வீட்டை அடித்து உடைத்ததாகவும்தான் இவ்வழக்கு என்றால் சரிதான். செல்வம் கொலை

செய்யப்பட்டதற்கான முதல் தகவல் அறிக்கை திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 06.07.2014 ம் தேதி செல்வம் இறந்துவிட்டதாக சொல்லியுள்ள தேதி சரிதானா என்றால் எனக்கு ஞாபகமில்லை. செல்வம் கொலை செய்யப்பட்டதற்காக திருவிடைமருதூர் காவல் நிலைய குற்ற எண் 93/2014 ல் 27.05.2014 ம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தற்போது ஞாபகமில்லை. செல்வம் இறந்து போனதற்கான இறப்பு சான்றிதழ் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் 2 நாட்கள்தான் இவ்வழக்கில் புலன் விசாரணை செய்துள்ளேன். இவ்வழக்கில் சேத மதிப்பு எதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சிகள் சொன்னதின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அசா1 எனது விசாரணையில் உயிருக்கு பயந்து குடும்பத்தோடு வெளியூர் சென்றுவிட்டு இன்று வீட்டிற்கு திரும்பி வந்து பார்த்து காலதாமதமாக காவல் நிலையம் வந்து 13.02.2015 அன்று இரவு 9.30 மணிக்கு புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் 08.02.2015 ம் தேதி புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி முனியப்பன் எனது விசாரணையில் 06.07.2014 ம் தேதி சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி முனியப்பன் எனது விசாரணையில் குறிப்பாக எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி முனியப்பன் எனது விசாரணையில் வீட்டை சேதபடுத்தியது குறித்து பாலு சொல்லிதான் தெரியும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி முருகன் எனது விசாரணையில் 06.07.2014 ம் தேதி சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சிகள் நவோதியா மற்றும் துர்க்கா ஆகியோர்களும் 06.07.2014 ம் தேதி சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். சாட்சிகள் முருகன் மற்றும் முனியப்பன் ஆகியோர் சம்பவ இடத்தை சேர்ந்தவர்கள் இல்லை என்றாலும் அவர்கள் வெளியூரை சேர்ந்தவர்கள்

என்றாலும் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள நபர்களை நான் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் அன்றைய தேதியில் என்னால் விசாரிக்க முடியவில்லை. இவ்வழக்கில் தடய பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். விசாரணையின் போது என்னுடன் காவலர்கள் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் தற்போது ஞாபகமில்லை. பொதுவாக விசாரணை செய்ய செல்லும்போது தினசரி பதிவேட்டில் பதிவு செய்வோம் என்றால் சரிதான். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் 10 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் உறுதியாக சொல்ல முடியாது. செல்வம் இறந்தது 27.05.2015 ம் தேதி என்றாலும் அதற்காக கும்பகோணம் நீதிமன்றத்தில் எஸ்.சி.54/2015 என்ற வழக்கு நடைபெற்றது என்றால் எனக்கு தெரியவில்லை. செல்வம் கொலை வழக்கில் சம்மந்தப்பட்ட கண்ணதாசன் பாலுவின் உறவினர் என்பதால் அந்த வழக்கினை சமரசமாக முடிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும் எதிரிகள்தான் உண்மையாக பாதிக்கப்பட்ட நபர்கள் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.10.14 10:09:05 +0000

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**